1973 நவம்பர் 19]

ஆரம்பக் கல்வி இயக்குநர் பதவி

*152 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி நிர்வாகத்திற்கென டைரக்டர் ஒருவரை நியமிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி நிர்வாகம் பலவாறுகச் சிதறுண்டிருக்கிறது. ஆகவே, அதை ஒருங்கிணைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றித்தான் அரசு ஆய்ந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் சிலபல சிக்கல்கள் இருக்கின்றன. அவை தனித் தனியாக இயங்க முடியுமா என்று ஆராய வேண்டும். அவற்றைக் கண்காணிப்பதற்கிருக்கிற தன்மைகள், மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி ஆகியவர்களுக்குள்ள பொறுப்புக்கள் எப்படி ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் பல சிக்கல்கள் எழுகின்றன. உயர்நிலைப் பள்ளியில் 6-வது முதல் 11-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். துவக்கப்பள்ளியில் 1-வது முதல் 5-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். இந்த இரண்டையும் இணைத்து வைத்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளை ஒருவரிடமும், துவக்கப்பள்ளிகளை மற்றொருவரிடமும் ஒப்படைக்கலாமா என்கிற திட்டத்தைக் கொண்டுவரும்போது 9--10--11 வகுப்புகளை என்ன செய்வது என்ற பிரச்சினை வருகிறது. ஆகவேதான், அரசாங்கம் இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. ஒரு சுமுகமான தன்மை ஏற்படுமானால் இது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

Job Oriental Education System.

*153 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to change the present Educational system as job oriented; and

(*b*) if so, the details thereof?